# தமிழக சட்டசபைத் தேர்தலும் (2016 மே) திராவிட முன்னேற்றக் கழகத்தினது வீழ்ச்சியும் - ஒரு அரசியல் விமர்சன நோக்கு

**க. அருந்தவராஜா**
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
arunn.msu@Gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழகத்தில் அண்மையில் நடைபெற்று முடிந்த சட்டசபைக்கான தேர்தலானது பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்ததுடன் பல்வேறு கருத்துக் கணிப்புக்களையும் பொய்யாக்கி எதிர்பாராத விளைவுகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. இத்தேர்தல் முடிவானது திராவிடமுன்னேற்றக் கழகத்தினதும் அதனது கூட்டணிக் கட்சிகளதும் தோல்வியினைப் பறைசாற்றிய முடிவாகக் காணப்பட்டது. அதாவது பொதுவாகப் பலரதும் எதிர்பாரப்பாகவும் கருத்துக்கணிப்பாளர்களது கணிப்பாகவும் எதிர்பார்க்கப்பட்டது யாதெனில் நடந்து முடிந்த சட்டசபைக்கான தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகமும் அதனது கூட்டணிக் கட்சிகளும் இணைந்து குறைந்தது 130 இற்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்று ஆட்சியினை அமைக்கும் என்பதே. (தினமலர், 2016 மே 08) இத்தகைய கருத்துக் கணிப்புக்களை தமிழகத்திலிருந்து வெளிவருகின்ற பத்திரிகைகள் மட்டுமன்றி, டெல்கியிலிருந்து வெளிவருகின்ற பத்திரிகைகள் மற்றும் இந்தியப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் எனவும் பல அமைப்புக்கள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இதற்கு மாறாக அக்கட்சியும் அதனைச் சேர்ந்த கூட்டணிக் கட்சிகளும் இணைந்து 98 ஆசனங்களையே பெற்றுக்கொண்டன. 5 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்ற தமிழகச் சட்டசபைக்கான இத்தேர்தலில் பிரதானமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையிலேதான் நேரடியான போட்டி காணப்படும். அவ்வாறே இம்முறையும் இத்தேர்தலில் ஏற்பட்ட நேரடியான பலப்பரீட்சையில் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்பாராதவகையில் தோல்வியினைச் சந்தித்தது. இத்தகைய தோல்விக்குப் பல காரணங்கள் ஆய்வாளர்களினால் முன்வைக்கப்படுகின்றன. வெற்றிக் கனியானது திராவிட முன்னேற்றக் கழகத்தினது பக்கமே தேர்தல் காலத்திற்கு ஒரு சில நாட்கள் வரை இருந்ததென்பதனை மறுப்பதற்கில்லை. தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த சமயத்தில் பல கட்சியிலிருந்தவர்களும் அக்குறிப்பிடப்பட்ட கட்சிகளிலிருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தனர். கருணாநிதியினது குடும்பத்தவர்களது பிரச்சாரமானது அனல் பறக்கும் வகையில் அமைந்திருந்தது. நல்ல பல திட்டங்களையும் தேர்தல் அறிக்கையாகத் திராவிட முன்னேற்றக் கழகமானது தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே வெளியிட்டிருந்தது. அதுமட்டுமன்றி அதிகளவான கருத்துக் கணிப்புக்களும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சார்பான வகையிலேதான் அமைந்தும் இருந்தது. இருப்பினும் ஆச்சரியப்படத்தக்க வகையில் ஐந்து முனைப் போட்டியிலமைந்த இத்தேர்தலில் அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகமே வெற்றியினைப் பெற்றிருந்தது. 1984 இன் பின்னராக அதுவரை ஏற்பட்டிருக்காத ஒரு மாற்றத்தினை இத்தேர்தல் தமிழக வரலாற்றில் ஏற்படுத்தியிருந்தது. (தினமணி, 2016 மே 17) இதற்கு முக்கியமான காரணிகளிலொன்றாகச் சொல்லப்படுவது இறுதி நேர அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினது தேர்தல் வெற்றிக்கான காய்நகர்த்தலே என்பதாகும். அதாவது சிறப்பாக அக்கட்சியினால் தேர்தலுக்கு ஏறத்தாள இரண்டு வாரங்களுக்கு முன்னதாக வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையே என்பது குறிப்பிடத்தக்கது.

***பிரதான சொற்பதங்கள்***: *தேர்தல் கூட்டணி, சட்டசபை, தேர்தல் அறிக்கைகள், இலவசங்கள், சுயேட்சைக் குழுக்கள்*

## அறிமுகம்

தமிழகத்தினது நீண்டகால அரசியல் வரலாற்றில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தனியான இடமுண்டென்பதனை எவரும் மறுக்கமுடியாது.தந்தை பெரியாரினால் ஆரம்பிக்கப்பட்ட திராவிடக் கழகத்திலிருந்து அண்ணாத்துரை மற்றும் சிலதலைவர்களும் கருத்துவேறுபாடுகளால் பிரிந்து 1949 இல் திராவிட

முன்னேற்றக் கழகத்தினை உருவாக்க முடிவு செய்தனர். இதன் முதலாவது பொதுச் செயலாளராக அண்ணாத்துரை தெரிவானார். பெரியார், அண்ணாத்துரை, எம்.ஜி.ஆர், கருணாநிதி போன்றவர்களால் அத்திவாரமிடப்பட்டும் வளர்தெடுக்கப்பட்டும் வந்த இக்கட்சியானது இன்று பல விழுதுகளைத் தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுகின்றது. இருப்பினும் 1970களின் ஆரம்பத்தில் அக்கட்சியிலிருந்து எம்.ஜி.ஆர் விலகிக்கொண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதியதொரு கட்சியினை ஆரம்பித்து செயற்பட ஆரம்பித்த நிலையிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தலையிடி ஏற்பட ஆரம்பித்தது.அண்மையில் நடைபெற்று முடிந்த தமிழக சட்டசபைக்கான இத்தேர்தல் வரை (2016) இதனை உணர முடிகின்றது. அண்ணாத்துரையின் மறைவிற்குப் பின்னதாக கருணாநிதி திராவிட முன்னேற்றக் கழகத்தினது தலைவராகவும் முதல்வராகவும் ஆனார். அச்சமயத்தில் கட்சியின் பொருளாளராக இருந்த எம்.ஜிஆர் அக்கட்சியிலிருந்தும் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து எம்.ஜி.ஆரின் முயற்சியினால் அரம்பிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானது இன்று ஜெயலலிதாவினுடைய தலைமையில் பெரு வளர்ச்சிகண்டு மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குடன் திகழ்வதனை நடைபெற்று முடிந்த சட்டசபைக்கான தேர்தலில் தொடர்ச்சியாக அக்கட்சி இரண்டாவது தடவையாகவும் ஆட்சியினைக் கைப்பற்றியிருப்பதன் ஊடாக அறிந்துகொள்ள முடிகின்றது.

இத்தேர்தலில் எதிர்பார்த்த வெற்றியினைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினது இத்தகைய தேர்தல் தோல்விக்குபல்வேறுகாரணங்கள் ஆய்வாளர்களினால் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.எது எவ்வாறாயினும் முன்பொருபோதும் இல்லாத வகையில் பண அரசியலின் செல்வாக்கானது இத்தேர்தலில் தாரளமாகவே தாண்டவமாடியிருந்தது. அதுமட்டுமன்றித் தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் பல்வேறு ஊழல் வழக்குகளில் சிக்கியுள்ள ஜெயலலிதாவினை இன்றும் தமிழக மக்கள் ஆதரித்துள்ளனரென்றால் அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதான அதிருப்தி அலையின் வெளிப்பாடாகவும் இருக்கலாம். ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் ஊழல், குடும்ப அரசியல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களும் எதிர்கட்சிகளால் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுப் பிரச்சினை**

ஆய்வென்பது பிரச்சினைக்குரிய விடயத்தினை எடுத்து அது பற்றிய ஆய்வினை மேற்கொண்டு அதற்கான சிபார்சுகளை முன்வைப்பதாகவே காணப்படும். இது ஆய்வுகள் எல்லாவற்றுக்கும் பொதுவாகக் காணக்கூடியதொரு இயல்பாகவும் உள்ளது. அவ்வகையில் அண்மையில் நடந்து முடிந்த தமிழக சட்டசபைக்கான தேர்தலில் எதிர்பார்க்கபட்ட முடிவிற்கு மாறாகவே தேர்தல் முடிவுகள் மாற்றங் கண்டிருந்தன. அனைத்துக் கருத்துக் கணிப்புக்களையும் இத்தகைய வெற்றியானது பொய்யாக்கியிருந்தது. இத்தகைய தோல்வியே இவ்வாய்விற்கான பிரதான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. எனவே இத்தகைய பிரச்சினைக்குரிய காரணங்களைக் கண்டறிவதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

ஆய்வானது பல்வேறு நோக்கங்களைக் கொண்டுள்ளது. இத்தகைய நோக்கங்களில் பிரதான நோக்கமாகக் காணப்படுவது திராவிட முன்னேற்றக் கழகத்தினது வீழ்ச்சிக்கான காரணங்களைப் பதிவு செய்வதாக அமைகின்றது. இருப்பினும் பின்வரும் துணை நோக்கங்களும் ஆய்வில் காணப்படுகின்றன. அவை வருமாறு.

1.நடைபெற்று முடிந்த தமிழக சட்டமன்றத்திற்கான தேர்தலில் கட்சிகள் ஒவ்வொன்றினதும் தேர்தலுக்கு முன்னரான நிலைப்பாட்டினை வெளிக்கொணர்தல்.

2.வருங்காலங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினது நடவடிக்கைகள் எவ்வாறு அமைதல் வேண்டுமென எதிர்வுகூறுதல்.

3.இவ்விடயமாக எதிர்காலங்களில் ஆராயமுனைவோருக்கானமுன்னோடியாகஅமைதல்.

4.ஆய்வொன்றில் ஆவணப்படுத்தல் என்பது இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

**ஆய்வுமுறையியல்**

அரசியல் விமர்சன நோக்கினை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமையப்பெற்றதாக இவ்வாய்வானது காணப்படுகின்றது. இவ்வாய்வில் முதற்தர மற்றும் இரண்டாந்தர ஆதாரங்கள் ஆய்வினது தேவைகள் கருதிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்தர ஆதாரங்களில் நேரடி அவதானிப்பு, நேர்காணல்கள், வினாக்கொத்துக்கள், அரசியல் கட்சிகளது அறிக்கைகள், பிரசுரங்கள், கட்சிகள் சார்பான பத்திரிகைகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாந்தர ஆதாரங்களில் தேர்தலுக்குப் பின்னதாக வெளிவந்த பத்திரிகைகளது வெளியீடுகள், சஞ்சிகைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் என்பன அடங்குகின்றன. இத்தகைய ஆதாரங்களினை அடிப்படையாக வைத்து நடைபெற்ற முடிந்த தமிழக சட்டசபைக்கான தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தினது வீழ்ச்சியானது நோக்கப்படுகின்றது.

**ஆய்வுப்பிரதேசம்**

ஆய்வொன்றில் ஆய்வுப் பிரதேசமென்பது பிரதான இடத்தினைப் பெறுகின்றது. அவ்வகையில் இந்தியாவின் தென்மாநிலங்களிலொன்றாகக் கருதப்படுகின்ற தமிழ்நாடுதான் ஆய்வுப் பிரதேசமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அங்குள்ள 234 தொகுதிகளும் ஆய்வில் பிரதான இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்குள்ள தொகுதிகளுக்கு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலின் முடிவினது அடிப்படையிலேதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினது வெற்றியும் திராவிட முன்னேற்றக் கழகத்தினது வீழ்ச்சியும் அமைந்திருந்தது. எதிர்கட்சி ஆசனத்தில் அமர்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு மட்டும் எல்லாமாக 89 இடங்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனைய இடங்களை அதனுடன் இணைந்த கூட்டணிக் கட்சிகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சுருக்கமும் முடிவும்**

பொதுவாக தமிழக முதலமைச்சராக எம்.ஜி.ஆர் அவர்கள் இருந்த காலத்திலேதான் தொடர்ச்சியாக அவரது தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானது இரு தடவைகள் ஆட்சியினைக் கைப்பற்றியது. அவரே முதல்வராகவும் அக்காலப்பகுதியில் இருந்துள்ளார். அதன் பின்னராக ஏறத்தாள 32 வருடங்கள் கடந்த நிலையில் மீளவும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானது தொடர்ச்சியாக ஆட்சியினை இரண்டாவது தடவையாகவும் கைப்பற்றியுள்ளது. இதற்குப் காரணங்கள் பல கூறப்படுகின்றன. பல புதிய திட்டங்களை தனது காலத்தில் ஜெயலலிதா அறிமுகப்படுத்தியிருந்தார். அவ்வாறே எம்.ஜி.ஆருடைய காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள் பலவும் இவரது காலத்தில் விரிவுபடுத்தப்பட்டிருந்தன. தேர்தல் அறிக்கையில் தமிழக மக்களுக்குச் சில வாக்குறுதிகளையும் வழங்கியிருந்தார். எம்.ஜி.ஆருடைய வாக்குகள் பலவற்றினையும் உள்வாங்கியிருந்தார். அதுவே அவரதுவெற்றிக்கான பின்புலமாகஅமைந்ததெனலாம். எது எவ்வாறாயினும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினது இறுதிநேர அதிரடி நடவடிக்கைகள் அக்கட்சிக்கான

வெற்றிக்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தன. அதுவே திராவிட முன்னேற்றக் கழகத்தினது வீழ்ச்சியாகவும்கூட அமைந்தது. மீளவும் திராவிடமுன்னேற்றக்கழகமானதுதமதுமுன்னைய ஆட்சிக்காலங்களிலும், இத்தேர்தல் பிரச்சாரத்தின்போதும், தேர்தல் அறிக்கையில் அது விட்டதவறுகள்இவை எல்லாவற்றினையும் திருத்திக்கொண்டு புதிய தலைமைத்துவத்தின் கீழ் எழுச்சியடைய வேண்டும். அதுவே தமிழக மக்களது எதிர்பார்ப்பாகவும் உள்ளது. அப்போதுதான் 2021 சட்டமன்றத் தேர்தல் அவர்களது வெற்றிக்கு வாய்ப்பாக அமையும்.